ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

सुतस्ते हे मातः भवजलधिमध्ये निपतितः
भृशं हाहाशब्दैस्सरणिमविदन् रोदिति शिवे ।
विलोक्यैनं पोतं भवसि करुणाहीनहृदया
यदि त्वं कोवान्यः कुलगिरिसुते पालयति माम् ॥

ஸுதஸ்தே ஹே மாத: பவஜலதிமத்யே நிபதித:
ப்ருசம் ஹாஹாசப்தைஸ்ஸரணிமவிதந் ரோதிதி சிவே ।
விலோக்யைநம் போதம் பவஸி கருணாஹீநஹ்ருதயா
யதி த்வம் கோவாந்ய: குலகிரிஸுதே பாலயதி மாம் ॥

ஹே மாத: லோகமாதாவான ஹே அம்பிகே! உன்னுடைய புத்திரன் ஸம்ஸாரமென்கிற கடலின் மத்தியில் விழுந்து கரையேறுவதற்கு வழியறியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு ஹா! ஹா! என்று சப்தித்துக்கொண்டு அழுகிறான். ஹே சிவே! ஸகல லோகங்களுக்கும் மங்களத்தைச்செய்யும் மஹேச்வரி! இவ்விதம் கஷ்டப்படும் உன் குழந்தையை நீ நன்றாய் கவனித்துப் பார்த்தும் கொஞ்சம்கூட தயவில்லாதவள்போல் இருந்தியேயானால் ஹே பார்வதீதேவி! வேறு யார் என்னை ரக்ஷிக்க முன் வருவார்.

உலகில் புத்திரர்களைப் பாதுகார்ப்பது பெற்றோர்களான தாயார்களின் கடமையாகக் கருதி அவ்விதமே அனுஷ்டித்தும் வருகிறார்கள். ஒரு ஸமயம் தம் புதல்வன் முட்டாளாயிருந்தாலும் அதைச் சற்றும் கவனியாமல் தம் கடமையை நடத்திக்கொண்டு வருவார்களென்பதும் பிரஸித்தமே. இக்கருத்தையே

कुपुत्रो जायेत क्वचिदपि कुमाता न भवति

குபுத்ரோ ஜாயேத க்வசிதபி குமாதா நபவதி

என்று ஒரு பெரியாரும் கூறியுள்ளார். ஆகையால் என்னுடைய தாயாரான நீ என்னிடம் குற்றங்களிருப்பினும் அவைகளைக் கவனியாமல் அவச்யம் ரக்ஷிக்கவேண்டிய உன் கடமையைச் செய்யவேண்டுமென்று ஸ்ரீ உமாதேவியிடம் ஒரு பக்தர் பிரார்த்திக்கிறார்.

சுபம்! உபபத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

விபவ-௵ சித்திரை-௴ ௨௮௳


## பால்யவிவாஹ மசோதா கண்டனக் கூட்டங்கள்.

சென்ற 30—4—28-ல் பிர்ம்மஸ்ரீ K. சுந்தாருமய்யரவர்கள், வக்கீல் G. வெங்கட்டருமய்யர், வக்கீல் மஹாலிங்கய்யர் முதலானவர்கள் திருவிசலூருக்குப் போயிருந்தார்கள். அவ்வூரிலுள்ள அசேஷமஹாஜனங்களாலும் இந்த மசோதா இந்துமதத்திற்கும் சிஷ்டாசாரங்களுக்கும் மிகவும் விருத்தமாயிருப்பதாலும் இது சட்டமானல் இதினல் பல கஷ்டங்கள் நேரக்கூடியதாயிருப்பதாலும் இது கூடாதென்று அழுத்தமாகக் கண்டிக்கப்பட்டு இதைச் சட்டமாக்கக்கூடாதென்று கனம் கவர்னர் அவர்களுக்கும் வைஸிராய் அவர்களுக்கும் மஹாஜனங்களால் கையெழுத்திட்ட மஹஸரும் அனுப்பப்பட்டிருக்கிறது.

மறுபடியும் அன்றையதினம் கீழ் குறிப்பிட்டவர்களே வேப்பத்தூர் கிராமத்திற்குச்சென்று அங்கும் ஒரு மஹாஜனஸபை கூட்டினர்கள். அச்சபையிலும் எல்லோராலும் ஏகமனதாய் இந்த மசோதா கண்டிக்கப்பட்டு உடனே இதைச் சட்டமாக்கக் கூடாதென்று வைஸிராய் அவர்களுக்கும் கவர்னர் அவர்களுக்கும் மஹஸரும் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தத் தேதியிலேயே வைக்கில் எம். கே. வைத்தினதய்யரவர்கள் இதன் உபபத்திராதிபர். கே. ராஜகோபாலய்யர் முதலானவர்கள் கோவிந்தபுரம், ஆடுதுறை, மருத்துவக்குடி இந்தக் கிராமங்களுக்குப் போயிருந்தார்கள். அங்கு ஒவ்வொரு கிராமத்திலும் அவ்வூரிலுள்ள மஹாஜனங்கள் ஸபைகூடி இந்தப் பால்யவிவாஹவயதுமசோதாவை அழுத்தமாகக் கண்டித்து இதைச் சட்டமாக்கக் கூடாதென்று வைஸிராய் அவர்களுக்கும் கவர்னர் அவர்களுக்கும் மஹஸர் அனுப்பியிருக்கிறர்கள்.

3—5—28-ல் மகா-ா-ஸ்ரீ வைக்கில் ஜீ. வெங்கட்டாராமய்யர், வைக்கில் மஹாலிங்கய்யர் முதலானவர்கள் ஸ்வாமிமலேக்குப் போய் அங்கு முந்தியே தயாராயிருந்த அசேஷமஹாஜனங்களால்

வரவேற்கப்பட்டு மீட்டிங் நடைபெற்றது. அதிலும் எல்லா ஜனங்களாலும் இந்த மசோதா கூடாது இது பாஸானல் இந்து மதத்திற்குப் பலவாருன கஷடங்கள் ஏற்படுமாகையால் இதை அங்கீகரிக்கக் கூடாதென்று வைஸிராய் அவர்களுக்கும் கவர்னர் அவர்களுக்கும் மஹஸர் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த தினத்திலேயே மகா-ள-ஸ்ரீ வைக்கீல் M. K. வைத்தினதய்யர் இதன் உபபத்திராதிபர். ராஜகோபாலய்யர் முதலியவர்கள் உமயாள் புரம் கிராமத்திற்குச்சென்றூர்கள். அங்கு இவர்களுடைய வரவை எதிர்பார்த்திருந்த அசேஷமகாஜனங்களும் இவர்கள்போனவுடன் ஒரு மஹாசபைக் கூட்டி இந்த மசோதாவைப் பலமாகக்கண்டித்து இதைச் சட்டமாக்கக் கூடாதென்று கவர்ண்மெண்டுக்கும் பல கையொப்பங்களாகிய மஹஸர்களையும் அனுப்பியிருக்கிறூர்கள் 4—5—28 மகா-ள-ஸ்ரீவக்கீல் M. K வைத்தினதய்யர் ஜீ. வெங்கட்டருமய்யர் இதன் உபபத்திராதிபர் முதலானவர்கள் மணலூர் கஞ்சனூர், கோட்டூர், துகிலி, திருக்கோடிகாவல் முதலான கிராமங்கள் சென்று அந்தந்த கிராமங்களிலும் கூடியிருந்த மஹாஜனங்களால் இந்த மசோதா இந்து மதத்தையும் அதின் முக்கிய தர்மங்களையும் அடியோடு நாசம் செய்யக்கூடியதாயிருப்பதால் இதைச் சட்டமாக்கக் கூடாதென்று எல்லா ஜனங்களும் ஏகமனதாய் நன்கு கண்டித்து அந்தத் தீர்மானத்தை வைசிராய் அவர்களுக்கும் கவர்னர் அவர்களுக்கும் மஹஸர்மூலம்அனுப்பப்பட்டிருக்கிறது.

இவர்களே மறுபடியும் 5—5—28 ல் கதிராமங்கலம் திருவாலங்காடு முதலான கிராமங்களுக்குப் போய் அங்கு கூடியிருந்த அந்தந்த கிராம ஜனங்களுடன் இந்த மசோதாவைப்பற்றிக்கண்டித்து உபன்யாஸங்கள் செய்து எல்லா ஜனங்களாலும் இது சட்டமாக்கக் கூடாதென்று ஏகாபிப்பிராயத்துடன் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தை வைசிராய் அவர்களுக்கும் கவர்னர் அவர்களுக்கும் பல கையெழுத்துக்களிட்ட மஹஸர்கள் மூலம் அறிவிக்கபபட்டிருக்கின்றன.

உபபத்திராதிபர்.

ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

## ஸ்ரீ ஆதி சங்கராசார்ய ஜயந்தி

# மஹோத்ஸவப் பத்திரிகை.

கோதைஆரிய வம்பிகைமகிழ் கொழுநனும் சிவகுருவெனும்
வேதியன்மக வாகிமாலயன் வேலனென்ன விளம்பிடும்
தீதிலாப் பத்மபாதனை மேர்ஸுராஜனும் குமரிலவனென்று
ஓதுமூவர்க ளோடுநீறணி சைவநாட் டியவும்பரான்.
(தம்மையே புகழ்ந் திச்சைபேசினும் என்ற தேவாரப்பண்.)

ஸ்ரீ கைலாஸவாஸியான ஸ்ரீ பரமேசுவரன் தர்மங்களுக்குக் குறைவேற்படுங்கால் இவ்வுலகில் தோன்றி தர்மஸ்தாபனம் செய்வதாக சாஸ்திரங்களில் கூறியதற்கிணங்க கலியுகம் சுமார் 2000-வருஷங்களுக்குமுன் இவ்வுலகில் பல துர்மதங்கள் பாவியதால் தர்மானுஷ்டானம் குன்றி ஸாதுக்களும் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது தர்மஸ்தாபனம் செய்து அவர்களுடைய கஷ்டத்தையும் நிவர்த்திக்கவேண்டுமென்று சிவகுருவென்கிற மஹானுக்குச் சிறந்த புதல்வராகத் தோன்றினர். அவ்விதம் அவதரித்த ஸ்ரீ பரமேசுவரன் தம் எட்டாவது வயதிற்குள் சகல கலைகளையும் கசடறக்கற்று மிகவும் மகிமைவாய்ந்த ஸந்யாஸாச்ரமத்தையுமடைந்து ஹிமாசலம் முதல் ஸேதுவரையில் ஸஞ்சாரம் செய்து ஆங்காங்குள்ள துர்மதங்களைக் கண்டித்து தர்மஸ்தாபனம் செய்து வைதிகமான சைவம், வைஷ்ணவம் முதலான ஆறு மதங்களை ஸ்தாபித்து ஜனங்களுக்கிருந்த அக்ஞானத்தை அடியோடு விலக்கி லோககுருவாய் விளங்கிவந்தார்கள். அவ்வித மஹானின் பிறந்த தினத்தைக் கொண்டாடவேண்டி நாளது விபவ-ஸ்ரீ சித்திரை-மீ 12உ செவ்வாய்க்கிழமை வைசாக சுக்ல பஞ்சமி (24—4—28உ)யன்று இவ்வூர் நரிபிச்சன்குண்டு ஊரணி மேல்கரை ஸ்ரீமாந் தீ. நா. அவர்கள் கட்டிடத்தில் விசேஷபூஜை வேதபாராயணம் ஆசார்ய சரித்திரப் பிரசங்கம் முதலானவைகளும் ஈஸ்வரபஜனம், சத்கதா காலக்ஷேபங்களும் நடைபெற்றன. அந்த ஸமயம் பக்தாபிமானிகள் அனைவரும் வந்திருந்து ஷை உற்சவத்தைச்சிறப்பாய் நடத்திவைத்து ஸ்ரீ பரமாசாரியாளுடைய அனுக்கிரகப் பிரசாதத்தைப்பெற்று அதிக ஆனந்தத்தையடைந்தார்கள்.

☞ S. சாம்பமூர்த்திசாஸ்திரி.

புதுக்கோட்டை சமஸ்தானம் ராமச்சந்திரபுரம்
காரைக்குடி பிர்மவித்யா விலாஸ ஸபை ஆசார்ய ஜயந்தி
மஹோத்ஸவ ப்ரகடனபத்திரிகை.

ஆஸ்திக ஸார்வபௌம சிகாமணிகாள்!

இம் மருடம் புனர்ந்த மஹோத்ஸவமானது மஹாமஹிமை சாலிகளான ஸ்ரீ ஜகத்குரு சங்கரபகவத்பாதாசார்யர்களுடைய ஞாபகம் நம்மவர்களுக்கு அடிக்கடி உண்டாகவேண்டுமென்பதற் காகவே பெரியோர்களால் ப்ரதிவருஷமும் நடத்தப்பெற்று வரு கிறது. அதுபோலவே நிகழும் விபவ-ஸு சித்திரை-மீ 10உ ஞாயிற்றுக்கிழமை த்ருதீயை கார்த்திகைநக்ஷத்திர்ம்கூடிய சுப யோகசுபதினத்தில் "ஸ்ரீமத் ஆசார்ய ஜயந்தி" என்னும் மஹோத் ஸவபத்தநியை காரைக்குடி ஜயங்கொண்டபுரம் பிர்ம்ம வித்யா விலாச சபையில் முறைப்படி நடத்தி அம்மஹோத்ஸவத்திற்கு வந்திருந்த ஆஸ்திகசிகாமணிகள் யாவரும் இஷ்டமித்திர பந்து ஜனஸஹிதர்களாய் ஸமயோசிதமாய் நடைபெற்ற ஜபபூஜோபன் யாஸாதிகளைப் பார்த்தும் கேட்டும் ஆனந்தித்து ஸ்ரீ பகவத் ப்ரஸா தத்தைப்பெற்று ஆனந்தக்கடலிலமிழ்ந்தார்கள்.

A. K, ஸ்வாமிநாதசாஸ்திரிகள்.

# நமது இந்துஜன ஸமூகம்.

(ஸ்ரீமா எழுதியது.)

4—2—28-லும், 11—2—28-லும் மித்திரன் பத்திரிகையில் இத்தலையணையுடன் ஓர் வியாஸத்தைப் படிக்கநேர்ந்தது. அதன் விஷயமாவது.

4—2—28-ல் கிருகஸ்தாச்ரமத்தைப்பற்றி விஸ்தரித்திருக் கிறார். அது முழுமையும் சரியாய் இருக்கிறதென்றேற்கமுடிய வில்லை. எழுதுபவரின் நோக்கம் ஒன்று, எழுதுவதொன்றாகத் தென்படுகிறது. அநேகமாய் ஓர் குடும்பத்தில் ஸ்திரீ புருஷர்கள் இருக்கவேண்டிய நிலையை இவர் கூறியபோதிலும் அதில் புருஷர் கள் ஸ்திரீகளை அடிமைபோல் நடத்துகிறார்களென்றும் சிற்சில ஸ்திரீகள் கல்வியறிவின்மையால் புருஷனைப்போற்றி நிற்பதில்லை

யென்றும் இவ்விஷயத்தை மிகைப்படக் கூறுகிறார். இதைப் பார்ப்பவர்கள் ஒருவாறு அப்படித்தான் உலகிலிருக்கிறது. அதைத் தடுக்கத்தான் வேண்டும் என்று ஆத்திரம் உண்டாகும் படி செய்கிறார். உண்மையில் அதல்ல. 100-க்கு 2-குடித்தனங்கள் புருஷனும் ஸ்திரீயும் சச்சரவு செய்துகொள்ளக்கூடியதாய் இருக்கலாம். அதுவும் பணத்தாசையாலும் வறுமையின் கொடுமையாலும் நடக்கிறது. அக்குற்றத்திற்கு நம்முடைய ஞானமில்லாத முறட்டுத்தனமும் பணத்தாசையும்தான் காரணமேயின்றி நம் சாஸ்திரத்தின் குற்றமல்ல. நமது முன்னோர்களின் குற்றமுமல்ல இதை ஸ்ரீமா சற்று நிதானிக்காமல் ஸ்திரீகளுக்குப் படிக்க இடம் கொடாததே காரணம் என்கிறார். இது சற்றேனுமொவ்வாது. மற்றும் ஸ்திரீகளும் விவாகம் செய்துகொள்ளாமலிருக்கலாமாவென்று அபிப்பிராயப்படுகிறார், அதற்கு நம் சாஸ்திரம் இடமே கொடுக்காது. அது அழகுமல்ல. பிறகு 2, 3,பிள்ளைகளைப் பெற்று நிறுத்திவிட வேண்டுமென்கிறார். அப்படி நிறுத்த மருந்து இவர் சரியாய்க் கூறவில்லை. 16 பிள்ளைகளைப் பெற்று என்பதற்கு 16 பிள்ளைகளை என்பதர்த்தமல்ல. 16விதமான பாக்கியம் என்று அர்த்தம் அல்லது 16 பேறுகளையும் என்பது பொருள் அதனால் குடும்பத்தில் மங்களகாமாய் இருப்பதென்பது கருத்தென்கிறார். இவர் சொல்வது அழகாயிருக்கிறது. ஆனால் ஒன்றும் ஒவ்வாது. ஏனெனில் 2, 3, பிள்ளைகளுடன் நிற்க இவனுக்கு ஆகக் கூடியதல்ல ஒன்றுகூடப்பிறக்காமல் தவிப்பவனுக்கு உண்டாக்கிக் கொள்ளவும் மருந்தில்லை. 16 வித பாக்கியத்தில் ஒரு பாக்கியத்தை அடையவும்இவனுக்கு ஸ்வதந்திரமில்லை. 16-பிள்ளைகளுக்கு மேல் 100 பிள்ளைகள் வைத்துக்கொண்டிருந்ததாயும் 50-கன்னிகைகளை மாந்தாதா அடைந்திருந்ததாயும் கதைகளில் வாசித்திருக்கிறோம். 16 குழந்தைகளைப்பெற்று சுகமாய் ஐசுவரிய பாக்கியத்துடன் வாழ்ந்து வந்ததாயும் அக்குடும்பத்தில் அவ்விதம் பிள்ளைகளைப் பெற்றதை அசாஸ்திரீயமென்று ஒருவர் சொன்னதாயும் நான் கேள்விப்படாமல் உத்தமமாய்க் கொண்டாடப்பட்டதாயுமான குடும்பத்தை இப்போதிருப்பதைப் பார்த்துமிருக்கிறேன். ஆகவே ஸ்ரீமா சொல்வது அழகாயிருப்பது போற்றோன்றியபோதிலும் சாஸ்திரத்திற்கு விரோதமென்பதை ஆராய்பவனறிவான். மற்றும்ஸ்ரீமாவுக்கு சாஸ்திரப்படிமனதில்எண்ணும் போதே கோபம் அவரை அடக்கிக்கொண்டு ததும்பிவழிகிறது.

பாருங்கள்! அவர் சொல்வது இது "புருஷன் படிப்பே மிகக் குறைவு. வயிற்றுப்பிழைப்புக்குஆகவேண்டிய சொற்ப ஆங்கிலப்படிப்போ. அல்லது வைதீகப் பிழைப்பிக்கு வேண்டியஆராச்சி இல்லாமல் குருட்டுப்பாடம் செய்தசொற்ப கிரந்தப்படிப்போ ஒரு·புருஷனுக்கு இருக்கிறது" என்று பார்த்தீர்களா ஸ்ரீமாவின் கோபத்தை இருக்கட்டும் என் செய்யலாம். இத்துடன் கிருஹஸ்தாச்ரமத்தை முடித்துவிட்டார். இனி 11-2-28 ன் விஷயத்திலிறங்குவாம்.

இதில் ஸ்ரீமா வானப்பிரஸ்தாச்ரமத்தை விளக்குகிறார். இங்கும் மனதில் எதையோ வைத்துக்கொண்டு 3-வது ஆச்ரமமான வானப்ரஸ்தத்தை விளக்கினர். ஆனால்

कर्मणैव हि संसिद्धिमास्थिता जनकादयः ।

கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய: ।

என்ற கீதா சுலோகத்தை இங்கு பிரமாணமாய்க் காட்டியிருக்கிறார். அது பிரகிருதத்தில் ஒட்டாது. பிறகு இத்தகைய 3-வது ஆச்ரமமும், 4-வது ஸன்னியாசாச்ரமும் இருந்தவிடமே தெரியாமற் போயிற்றென்கிறார். அவ்விதமில்லை. 4-வது ஆசிரமம் பகவத்பாதரவதாரம் முதல் இருந்துகொண்டே இருப்பதையும் 3-வது ஆச்ரமம் கலியில் கூடாதென்று தர்மசாஸ்திரங்கள் விலக்கிவிட்டதால் இல்லை என்பதையும் ஸ்ரீமா தெரிந்துகொள்ளாமல் கூறிவிட்டனர், பிறகு புருஷனுக்குள்ள தர்மமெல்லாம் பெண்களுக்கு மென்பதை மறுபடி நினைப்பூட்டிக்கொள்ள வேண்டுமென்கிறார். புருஷதர்மம் வேறு. ஸ்திரீ தர்மம் வேறென்பதை ஸ்ரீமா நினைத்துக்கொள்ளவேண்டும்.

பிறகு தற்காலம் ஆச்ரமதர்மத்தை நிலை நிறுத்தவேண்டுமென்று வாடும் கும்பகோணம் கனவான்கள் ஒருவரேனும் இவ்வாச்ரமம் நான்கையும் கைக்கொண்டு அதன்படி நடந்தால் பிறருக்கு மிகுந்த உதவியாயும் நல்ல உதாரணமாயுமிருக்கும். வாயினால் மாத்திரம் கத்திவிட்டு அனுபவத்தில் ஒன்றுமில்லாமலிருந்தால் அதில் யாது பிரயோஜனம் என்கிறார்.

இங்கு கும்பகோணம் கனவான்களென்று ஸ்ரீமா கூறுகிறார். அவர்கள் இன்னாரென்று கூறலாகாதோ, அவர்களிடம் வெறுப்புக்குக் காரணம் யாது? யாதுமிருக்கலாம் இருக்கட்டும். நான்கு

ஆச்ரமத்தையும் யாரேனுமொருவர் அனுஷ்டித்துக் காட்டக் கூடாதாவென்கிறார், ஒருவரால் நான்கு ஆச்ரமமும் ஏககாலத்தில் அனுஷ்டித்துக் காட்டமுடியாதென்பதைக்கூட ஸ்ரீமா அறிந்து கொள்ளமுடியவில்லையே பரிதாபம், ஸ்ரீமாவென்ற பெயரைக் கொண்டு இவர் புருஷரா ஸ்திரீயா இந்து மதஸ்தரா அன்யமதஸ் தராவென்று தீர்மானம் செய்துகொள்ளமுடியாமலிருக்கிறது. இந்து புருஷராய் இருந்தால் ஒருவனால் நான்கும் அனுபவித்துக் காட்டமுடியாதென்பதை நன்கு உணர்ந்திருப்பார். பல பெயர் வழிகள் 3 ஆச்ரமங்களை அனுஷ்டித்துக் காட்டக்கூடாதோ வெனில் சுலபமாய் முடியும். எத்தனையோ பெயர்கள் அனுஷ் டித்துக்கொண்டுதானிருக்கிறார்கள். ஆனால் பார்ப்பவர்களும் பார்த்தவுடன் அனுஷ்டிக்கவும் அனுஷ்டானத்திற்குத் தூண்டுதல் செய்யும் பிரபுக்களும்தான் குறை. அத்தகையோரைத் தூண்ட வாசாகைங்கர்யமாவதிருக்கட்டுமே.

பிறகு ஓர் கிறஸ்துவமாது ஒரு உபன்யாஸத்தில், தன் தாய் தந்தையர் தீண்டாவகுப்பார்களென்றும் அவர்கள் கிறிஸ்துமதத் தைத் தழுவியதாயும் அதனால் படித்து மெட்ரிகுலேஷன் படித்துத் தேறி இப்போது 100 ரூ சம்பளம் பெறுவதாயும் ஆகவே நம் தேசத்தாருக்கு நான் கடமைப்பட்டவள் அல்லவென்றும் பாதிரி மார்களுக்கே கடமைப்பட்டவளென்றும் சொல்லிவிட்டாளாம். இங்கு சற்று ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று ஸ்ரீமா சொல் கிறார். ஆராய்ச்சி செய்தால் என்ன வரும்? உபகாரம் செய்தவ னுக்குப் பிரத்யுபகாரம் செய்யவேண்டியதுதான் நியாயமென்று படும். ஆராய்ச்சிசெய்த ஸ்ரீமா இதைக் கூறுகிறார். அறிவுடை யோர் பிராமணர் அவர்கள் சிறந்த ஞானம் அறிவு பக்தியுடன் கீழ்வகுப்பாருக்கு உபதேசம் செய்யவேண்டும். இதற்காகவே ஆதியில் முதல் வர்ணம் ஏற்பட்டது. இப்படிச் செய்பவர்களைப் போற்றி அவர்களது ஜீவனத்திற்கும் உதவிவந்தனர் என்கிறார். அத்தகையோர் இப்போது 100-ல் ஒருவரேனும் உயர்ந்த நூலைப் படித்து அதன்படி நடக்கிறானா? பரிதாபம்! இல்லவே இல்லை யென்று ஸ்ரீமா ஸத்தியம் செய்கிறார். ஸ்ரீமா இவ்விஷயத்தில் அசத்தியக்காரராய்ப் போவார். பிராமணன் குடித்தனத்திற்கு வேண்டியதைக் கொடுக்க முன்வருபவருலகிலுளரேல் இப்போதே ஸ்ரீமா சொல்கிறபடி உயர்ந்த நூலைக்கற்ற ஸ்வானுஷ்டானமுள்ள

பண்டிதாத்தினங்கள் லோகோபகாரத்திற்காகக்கிளம்பத்தயாராக அநேகர் இருக்கின்றனர் என்பதை இவர் தெரிந்துகொள்ளும் கோஷ்டியையே கண்ணுற் பார்க்காமலும் காதாற் கேட்காமலும் வீண் கூக்குறல் போடுகிறார் என்பது தெற்றென விளங்குகிறது. பிறகு 50-வயதுக்குமேல் பிறருடைய க்ஷேமத்துக்காகவும் நன்மைக்காகவுமே வாழ்நாளை அர்ப்பணம் செய்யவேண்டுமென்கிறார். முற்கூறப்பெற்ற பண்டிதர்கள் அதற்கு முன் வயதிலேயே லோகோபகாரம் செய்யத்தயாராயிருக்கின்றனர். மற்றவர்ணத்தவரும் 50-வயதுக்குமேல் கிளம்பிவிட்டால் லோகம் கிருதயுகமாய் மாறிவிடும். பிறகு 24-வது மதகுருவாகிய ஸ்ரீமத்சங்காராசார்யார் இந்த ஒரு சீர்திருத்தத்தைச் செய்வாரானால் எத்தனை க்ஷேமம் உண்டாகும் என்கிறார். 24-வது மதகுரு சங்காராசார்யார் என்றால் என்ன அர்த்தம். 24-வது பட்டம் பெற்றவர் என்றவரா. அக்கணக்கு காஞ்சிகாமகோடிபீடாதிபதிகளுக்கு ஏற்காது. அவர்கள் இப்போது 68-வது பட்டம் பெற்றவர்கள். மற்று சிருங்கேரீபீடமென்போமென்றால் அதிலும் 34-வது பட்டமதான். ஆகவே 24-என்ற கணக்கு எந்த இடத்திலோ ஸ்ரீமாதான் சொல்லவேண்டும். ஒன்று இதில் சந்தோஷமடைகின்றேன். மதகுருவென்று அடைமொழி சாற்றுகின்றார். அப்பதம் அவரதுமனதிற்குள்ளிருந்து வந்திருந்தால் மதவிஷயத்தைப்பற்றி நாம் பேசக்கூடாது. மதாசாரியர் ஒருவர் இருக்கிறார் மதவிஷயம் அவரைச் சார்ந்தது அதைப்பற்றி நாம் பேசவாவது, சீர்திருத்தவாவது அதிகாரம் பெறவில்லையென்று ஒதுங்கலாம். அவ்விதம் ஒதுங்காமல் மதகுரு இருக்கிறாரென்று தெரிந்துகொண்டு கண்டகண்டவாறுபேசுவதும் எழுதுவதும் எவ்வளவுதூரம் நியாயமோதெரியவில்லை.

பிறகு ஸ்ரீமா சாஸ்திரோபதேசம் செய்கிறார். ஒவ்வொரு பிராமணனும் பகவத்கீதை முதலிய உயர்ந்த நூல்களைப் படித்தல் வேண்டும். 25-வயது வரைக்கும் ப்ரம்மசாரியாக இருத்தல் வேண்டும். 50-வயதுக்கு மேல் ஆசையை விட்டு வானப்ரஸ்தனாகி லோகோபகாரம் செய்ய வேண்டும். 75-வயதுக்கு மேல் சன்னியாஸாச்ரமம் பூணல் வேண்டுமென்று ஸ்ரீமா சொல்வது அழகாய்த்தானிருக்கிறது. ஆனால் அவ்வளவு வயது பரியந்தம் மனிதனிருப்பதற்கு ஸ்ரீமா ஜாமீன் கொடுப்பாரா. அவ்விதம் ஸ்ரீமா முன்வந்தாலும் அதை ஜனங்கள் நம்பவேண்டும். என்ன

செய்வோம். ஏதோ உலகம் சாஸ்திரம் யாவற்றையுமறிந்தவர் போற் பேசுகின்றனரே யொழிய நடப்பில் யாதும் பயன்படாது.

नातिजीवति वै कश्चिन्नरो वर्षाणि विंशतिम् ।
पलितोद्भवश्च भविता तथा द्वादशवार्षिकः ।
कुमार्यश्च प्रसूयन्ते तस्मिन् कलियुगे सदा ॥

நாதிஜீவதி வை கஶ்சிந்நரோ வர்ஷாணி விம்ஶதிம் ।
பலிதோத்பவஶ்ச பவிதா ததா த்வாதஶவார்ஷிக: ।
குமார்யஶ்ச ப்ரஸூயந்தே தஸ்மிந் கலியுகே ஸதா ॥

கலியுகம் வரவர 20-வயது வரைகூட மனிதன் ஜீவிப்பதரிது. 12-வதுவயதிலேயே தலை நரைத்துவிடும். அக்காலத்தில் குழந்தை ஸ்திரீகளேபிரஸவிக்கஆரம்பிப்பார்கள் என்பதாதிகோடானுகோடி ரிஷி வசனங்களை மாற்ற ஸ்ரீமாவா வல்லவர். இம்மனப் பாலால் பயன் யாதுமில்லை. ஆகவே மதத்தையும், மதாசார்யரையும், தெய்வத்தையும் சரணமென்றடைந்து மனம்போன போக்கெல்லாம் நிறுத்தி அடங்கினுல்தான் குரு அனுக்கிரஹத்தாலும், ஈசனருளாலும் இக்கலியை ஜயித்து இம்மை மறுமைப் பயனை அடையலாமென்பதை ஆஸ்திகர்களறிவார்கள். சுபம்!

M. N. சுபபிரமணிய சாஸ்திரிகள்.

ஶ்ரீ சந்த்ரமௌளீஶ்வராய நம: ।

## விபவ-ஸாலத்திய ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவ வைபவம்.

கூடலூர் தாலூகா பண்ருட்டியைச் சேர்ந்த புதுப்பேட்டை கிராமத்தில் ஸ்வஸ்தி ஸ்ரீ விபவ வருஷம் சித்திரைமீ 12-ந்தேதி பௌமவாரம் சுக்ல பஞ்சமி ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடாதிபதியாகிய ஜகத்குரு ஆதிசங்கரபகவத்பாதாசாரியாள் ஜனனமஹோத்ஸவ வைபவத்தை புதுப்பேட்டை வாசிகளும் சமீப பிரதேசங்களில் இருக்கப்பட்ட ஆஸ்திகமஹா ஜனங்களாலும் ரொம்பவும் பக்திசிரத்தையுடன் ஷை பகவத்பாதாசாரியாள் அவதார தினத்தன்று பகலில் வேதபாராயணம் மகந்யாஸஸகிதம் விசேஷ பூஜா கைங்கரியங்களும் பிராமண ஸந்தர்ப்பணைகளும் இரவில் பானக பூஜையும் சத்கதா காலக்ஷேபமும் வெகு விமரிசையாய் நடந்தேறியது.

ஸ்ரீ த்ரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்த்ரமௌளீஸ்வர கிருபையாலும் ஆசார்யாளான ஜகதகுரு சந்நிதானததின் அநுக்கிரஹத்தாலும் மேல்மேலும் ஐஹிகாமுஷ்மிக சிரேயஸ்ஸுகள் உண்டாகவேண்டும். என்று பக்தகோடி சிஷ்யர்கள் அனைவரும் ரொம்பவும் வணக்கத்துடன் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

சே. சாம்பமூர்த்திகனபாடிகள்.

# ஸ்ரீமடீய உபந்யாஸங்கள்.

## (காட்டுமன்னார்கோவில்)

கும்பகோணம், ஸ்ரீ காஞ்சீகாமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யமஹாஸ்வாமிகள் ஸமஸ்தானத்தில் ஏற்பட்டிருக்கும் தர்மகாரியங்களில் ஒன்றான உபந்யாஸரூபமான தர்மப்பிரசாரம் தஞ்சை ஜில்லாவிலும், திருச்சி, கோயம்புத்தூர் ஜில்லாக்களிலும் நடந்து வருவது வித்வான்கள் அறிந்த விஷயமே. அவ்வித உபன்யாஸங்கள் ஜனஸமூகத்துக்கு க்ஷேமகாமாயும் ஞானப்பிரதமாயும், அரிஷ்டநிவாரகமாயும், இருக்கின்றனவென்பது அறிஞர்களுக்கு வெளிப்படை. இம்மாதிரியான உபந்யாஸகரான இஞ்சிக்கொல்லை பிரம்மஸ்ரீ வி. ஜகதீஸ்வரசாஸ்திரிகளை அடியேன் வரும்படி நேரிலும் ஸ்ரீமடம் ஆபீஸுக்குக்கடிதமூலமாகவும் பிரார்த்தித்தேன். அதற்கிணங்கி ஷ்டியார் கிருபைபுரிந்துவந்து அடியிற் கண்டபடி உபந்யாசங்கள் புரிந்தார்கள்.

### முதல்நாள்.

ஊரிலுள்ள எல்லா பிராமணர்களும் உத்தியோகஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள். ஸப்மேஜிஸ்ட்ரேட் தலைமை வகித்தார். உடனே அடியேன் ஸபையோர்களுக்குஉபந்யாசகர்பெருமையையும் வந்திருக்கும் நோக்கத்தையும், சிறிதுகூறி அறிமுகம் செய்து வைத்தேன். பிறகு ஸ்ரீமான் சாஸ்திரிகள் தர்மம் என்பதைப்பற்றி, ஒவ்வொருவரும் ஜன்மாந்தா லோகாந்தரங்களை விசாரிக்க வேண்டுமென்றும் ஸமஸ்கிருதப் படிப்பின் குறைவாலேயே நமது தர்மசாஸ்திரத்தைப் படித்துத் தெரிந்துகொள்ளமுடியாததினால் அநேகவித தவறுதலான கார்யங்கள் ஏற்படுகிறதென்றும் "ஜன்மாந்தரம் உண்டா ?" என்று கேட்கப் புகுந்தவனும் நமது மதத்திற்குச் சமீபித்தவனென்றும் நம்மதப்பற்றில்லாத தேசீய ராஜீயகாரியங்கள் பிரயோஜனப்படுகிறதில்லையென்றும், பிரமாண பூர்வகமாக இரண்டுமணி நேரம் உபந்யஸித்தார்.

## இரண்டாவது நாள்

தர்மத்தை அஸ்திவாரமாய்க்கொண்டு விவாகம் ஓர் ஸம்ஸ்காரமாய் ஸ்திரீகளுக்கு ஏற்பட்டதென்றும், புருஷனுடைய பிராம்மண்யம் ஸஹஜமாயிருந்தாலும் உபநயனத்தால் அபிவ்யக்தியையடைவதுபோல ஸ்திரீகளுக்கும் உபநயனஸ்தானமான விவாகத்தை கர்ப்பாஷ்டமவர்ஷமான ஏழாவது வயதிலும்,கௌணமாக 10-வயதுக்குள்அல்லது ருதுவாகிறதற்குமுன்னுடியாவது கட்டாயம் விவாகம் செய்து விடுவதே நமது சாஸ்திரசம்மதமென்றும் ஸ்திரீகள் ஸ்வதந்திரமில்லாமலிருப்பது அவர்களைத் தாழ்மைப் படுத்துவதற்கல்ல. அவ்வித உத்தம வஸ்துக்கள் ரத்னம், பலம், இவைகளைப்போல் ரக்ஷிக்கப்படவேண்டுமேயன்றி நச்சந்தியில் கிடப்பதுபோல் நாதனில்லாமல் கிடக்கக் கூடாதென்றும்,நமது குலஸ்திரீகளாலேயே நமது மதம் சிலவிடங்களில் காக்கப்படுகிறதென்றும், விவாகவயது மசோதா கண்டிக்கத் தக்கதென்றும் இனிது உபன்யசித்தார்.

## மூன்றாவது நாள்

பக்தியைப்பற்றிப் பாமரனும் அறியும்படியும் நவவித பக்தியின் ஸ்வரூபம் சரித்திரம் இவைகளை விளக்கி ஸபையோர்களை பக்தி பரவசர்களாகச் செய்தனர். பிறகு ஸபையோர்களின் பிரேரணையின் பேரில் உபந்யாஸகருக்குச் சில உபசாரமொழிகள் கூறி சென்னையில் சமீபத்தில் நடந்த வர்ணாசிரமதர்மமகாஸபையின்நடவடிக்கையைச் சுருங்கச்சொல்லி இவ்வூரில் ஓர் வர்ணாசிரமதர்ம ஸபை ஏற்படுத்தவேண்டுமென்றும் இது சென்னைமகாஸபையைத் தலைச்சபையாக ஏற்கவேண்டுமென்றும் இம்மாதிரி உபன்யாஸங்கள் இங்கு நடக்கக் கிருபைபுரிந்த ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யபாதாளுக்கு இச்சபை அநேககோடி வந்தனங்களைச் செய்கிறதென்றும் மற்றமடாதிபதிகளும் இம்மாதிரி தர்மப்பிரசாரம் செய்து வருவரேல் மதத்வேஷிகளின் இடையூறு நசிக்குமென்றும் பிரார்த்தித்தேன். மறுபடி உபன்யாஸகருக்கு மாலை சூட்டி இனிது நிகழ்வுற்றது. மறுநாள் ஓமாம்புலியூரிலும் விவாகவிஷயமாய் உபந்யசித்து கொமாக்ஷி கிராமம் சென்று, அங்கிருந்து சிதம்பரம் சென்றார்.

சுபம்!

கிருஹ்யக்ஞ வி. உமாமகேச்வரசாஸ்திரி.